**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2026–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.01.2026 | | |
| பெயர்: | விஜயா<br>(PW–2 Chief ) | கணவர் பெயர்: | காத்தமுத்து |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வவிசாயம் | வயது : | 70/2026 |

**முதல் விசாரணை : 22.01.2026**

நான் இவ்வழக்கின் வாதி தரப்பு சாட்சியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. எனது ஆதார் அட்டையின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ**.18 ஆகவும்

2. எனது கணவர் காத்தமுத்துவின் இறப்புச் சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ**.19 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.